பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
28 05 2025 12 40
புதன்கிழமை பிற்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வீர்சாவர்க்கரின் 142 ஆவது பிறந்தநாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் திரு அமித் ஷா உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர்.

2. வளர்ந்து வரும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான ஒத்துழைப்பு குறித்து வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி இன்று அமெரிக்காவில் மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

3. பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் இன்னுயிர் நீத்த 26 பேரின் நினைவாக **Baisaran** பகுதியில் நினைவுச்சின்னம் அமைக்கப்படும் என்று ஜம்மு கஷ்மீர் முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா அறிவித்துள்ளார்.

4. மாநிலங்களவைத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் 3 வேட்பாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது.

5. சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி என மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

சுதந்திரப் போராட்ட வீரர் வீர்சாவர்க்கரின் 142 ஆவது பிறந்த நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பாரத தாயின் தவப்புதல்வரான வீர்சாவர்க்கர் அந்நிய ஏகாதிபத்தியத்தின் துன்புறுத்தல்களுக்கு ஆளானபோதிலும், தாய்நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்டவர் என தெரிவித்துள்ளார்.

அவரது துணிச்சல் மற்றும் சுதந்திர போராட்டத்திற்கான பங்களிப்பை நாடு நன்றியுடன் நினைவுகூரும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், தேச நலனுக்காக மறக்க முடியாத பங்களிப்பை வழங்கியுள்ளார் என புகழாரம் சூட்டியுள்ளார்.

தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் ஆங்கிலேயருக்கு எதிரான அனைத்து விதமான போராட்டங்களையும் முன்னெடுத்து, அந்தமான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சாவர்க்கர் தேச விடுதலைக்காக இளைஞர்களை உத்வேகப்படுத்தியவர் என தெரிவித்துள்ளார்.

இந்நாளையொட்டி மகாராஷ்டிரா ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன், ராஜ்பவனில் வீர்சாவர்க்கரின் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் ஆளுநர் மாளிகையின் உயரதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

>><><><><<

சிக்கிம், மேற்குவங்கம், பீகார், உத்தரப்பிரதேசம் ஆகிய நான்கு மாநிலங்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை முதல் இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

முதலில் சிக்கிம் மாநிலத்திற்கு செல்லும் பிரதமர், அம்மாநிலத்தின் 50 ஆண்டு கால வளர்ச்சி குறித்த சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்.

அம்மாநிலத்தின் பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை திறந்து வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் உரையாற்றவுள்ளார்.

பின்னர் மேற்கு வங்க மாநிலம் செல்லும் பிரதமர், **Alipurduar Cooch Behar** மாவட்டங்களில் எரிவாயு விநியோக கட்டமைப்புகளை தொடங்கி வைக்கிறார்.

நாளை மாலை பீகார் செல்லும் பிரதமர், பாட்னா விமான நிலையத்தில் புதிய முனையத்தையும் தொடங்கி வைக்கிறார்.

நாளை மறுநாள் பீகார் மாநிலத்தின் காராகட் நகரில் 48 ஆயிரத்து 520 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து பொதுமக்களிடையே அவர் உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின் உத்தரப்பிரதேச மாநிலத்திற்கு செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி, 20 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை கான்பூர் நகரில் தொடங்கி வைத்து பொதுமக்களிடையே உரையாற்றவுள்ளார்.

>><><><><<

வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப மேம்பாட்டிற்கான ஒத்துழைப்பு குறித்து அமெரிக்காவுடன் இந்தியா இன்று ஆலோசனை நடத்தியது.

வெளியுறவுத் துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி அமெரிக்காவில் தொழில்நுட்பத் துறைக்கான மூத்த அதிகாரி திரு **Jeffrey Kessler** –வுடன் இதுதொடர்பான முக்கிய விஷயங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தியா – அமெரிக்கா இடையே வர்த்தகத்திற்கான பேச்சுவார்த்தைகளுக்கு இந்த சந்திப்பு முன்னோடியாக அமைந்துள்ளது.

>><><><><<

ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் தீவிரவாதிகளின் தாக்குதலில் உயிரிழந்த 26 பேரின் நினைவாக, **Baisaran** பகுதியில் நினைவுச் சின்னம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா அறிவித்துள்ளார்.

பஹல்காமில் நேற்று நடைபெற்ற ஜம்மு கஷ்மீர் யூனியன் பிரதேச அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் அங்கு நடைபெற்ற சுற்றுலா ஏற்பாட்டாளர்கள் கூட்டத்தில் பேசிய திரு உமர் அப்துல்லா, ஜம்மு கஷ்மீரில் சுற்றுலாவுக்கு புத்துயிர் ஊட்ட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

சுற்றுலாத் தலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக்கப்படும் என்றும் திரு உமர் அப்துல்லா கூறியுள்ளார்.

>><><><><<

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது ஜம்மு கஷ்மீரில் சிறப்பாக கடமையாற்றிய 200-க்கும் மேற்பட்ட ரயில்வே பணியாளர்கள் கவுரவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு ரயில்வேயின் ஜம்மு கோட்டத்தில் வர்த்தகப் பிரிவு மேலாளர் திரு உச்சித் சின்கல் 209 ரயில்வே பணியாளர்களை கவுரவித்து சான்றிதழ்களை வழங்கினார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பயணிகளை பத்திரமாக குறிப்பிட்ட நேரத்தில் அவர்கள் செல்லும் இடங்களுக்கு அழைத்துச் சென்றதாக எமது ஜம்மு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இடர்பாட்டு காலத்திலும் பயணிகள் தங்களது இருப்பிடங்களுக்கு செல்வதற்கு போதிய உதவிகள் செய்து தரப்பட்டதாகவும் அவர் கூறுகிறார்.

ரயில் நிலையங்களிலிருந்து அவர்கள் வீடுகளுக்கு செல்வதற்கும் பாதுகாப்பான போக்குவரத்து வசதி செய்து தரப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

மாநிலங்களவைத் தேர்தலில் திமுக சார்பில் திரு. பி. வில்சன், திரு. எஸ்.ஆர். சிவலிங்கம், திருமதி ரொக்கையா மாலிக் என்கிற கவிஞர் சல்மா ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு ஒரு இடம் ஒதுக்கப்படுவதாகவும் திமுக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலிருந்து மாநிலங்களவைக்கு ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அடுத்த மாதம் 19 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதற்கான வேட்பு மனுதாக்கல் வரும் 2 ஆம் தேதி தொடங்கவுள்ளது.

>><><><<

சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அவர் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணம் ஆகியிருப்பதாகவும் நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தண்டனை விபரங்கள் வரும் 2ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ளது.

இந்த வழக்கு அரிதினும் அரிதான வழக்கு என்பதால், குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அவருக்கு இரக்கம் காட்டக்கூடாது என்றும் அரசுத் தரப்பில் வாதிடப்பட்டது.

>><><><<

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள சாலையோர வியாபாரிகள் பிரதமரின் ஸ்வநிதி திட்டத்தின் கீழ் கடனுதவி பெற்று தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர்.

இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு மேலும் உதவும் வகையில் காப்பீடு பெறுவதற்கும் மத்திய அரசின் சார்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக திருப்பூரில் நடைபெற்று வரும் சிறப்பு முகாமில் சாலையோர வியாபாரிகள் தங்களது விவரங்களை கொடுத்து காப்பீடு பெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - சபரீஷ் - 48 செகண்ட்ஸ்)*

>><><><<

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வந்த கனமழை குறைந்துள்ளதை அடுத்து, மாவட்ட நிர்வாகம் சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி அளித்துள்ளது.

உதகை தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா ஆகியவை இன்று திறக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிகளுக்கு ஆர்வமுடன் சென்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் - 30 செகண்ட்ஸ்)

>><><><<

தலைநகர் தில்லியில் வெப்ப அலையின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

அதிகபட்ச பகல்நேர வெப்பநிலை 39 டிகிரி செல்சியஸாகவும், இரவு நேர வெப்பநிலை 27 டிகிரி செல்சியஸாகவும் பதிவாகியுள்ளது.

இன்றைய வானிலை மாற்றம் தொடர்பாக எந்தவொரு அறிக்கையையும் இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிடவில்லை எனினும் நாளை முதல் தட்பவெப்பநிலையில் மாற்றம் ஏற்படும் என்று கூறியுள்ளது.

தலைநகர் தில்லி மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் காற்று மற்றும் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணிக்கு 30 முதல் 40 கிலோமீட்டர் வேகத்தை எட்டக்கூடிய பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளத.

பலத்த காற்றுடன் கூடிய மழை இம்மாதம் 31 ஆம் தேதி வரை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>><><><<

இந்திய பங்குச்சந்தைகள் இன்று காலை முதல் இறங்குமுகமாக இருந்து வருகிறது.

மும்பை பங்குச்சந்தை சென்செக்ஸ் தொடக்கம் முதலே இறங்குமுகமாக சென்று நண்பகல் நிலவரப்படி 81 ஆயிரத்து 321 ஆக உள்ளது.

இன்று காலை முதல் 231 புள்ளிகள் குறைந்துள்ளன.

தேசிய பங்குச்சந்தை நிப்டியும் இன்று காலை முதல் 69 புள்ளிகள் குறைந்து 24 ஆயிரத்து 757 ஆக உள்ளது.

**>> End of News <<**